சுருக்கம்

பணியமைப்பு–மூன்றாண்டுகளுக்கு மேலாக அயற்பணியில் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்கள்– 1981ஆம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டப் பிரிவு 116–இன்படி – சில நகராட்சிகளுக்கு பணி மாறுதல் செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.5) துறை

அரசாணை (ப) எண். 181 நாள் 30.04.2009

(திருவள்ளுவராண்டு 2040 சித்திரை
மாதம்–17–ம் நாள்)

படிக்கப்பட்டது:

1. அரசு கடித எண்.29411/மா.ந.5/2008–5 நாள் 13.4.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5, கடித எண்.ந.க.42258/2008/F4 நாள் 24.04.2009.

ஆணை:

பார்வை 2–இல் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, திருமதி.எம்.லலிதா, திரு.எம்.செல்வராஜ், திருமதி.ஜி.சுமதி, திரு.ஜே.ஒப்லிசுந்தர் மற்றும் திரு.வி.நடராசன் ஆகியோர்கள் மட்டுமே ஒரே இடத்தில் மூன்றாண்டுகளுக்குப் மேலாக பணிபுரிந்து வருகின்றனர் என்றும், மூன்றாண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணிபுரிந்து வருவதால் 1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டப் பிரிவு 116–இல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட நகராட்சிகளுக்கு மாறுதல் செய்யலாம் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

....2

| வ.எண் | உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர் பெயர் | தற்போது பணிபுரியும் இடம் நகராட்சி/ மாநகராட்சி | பணியில் சேர்ந்த நாள் | | மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்ட நகராட்சிகளின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 முதல் | 5 வரை | 6 |
| 1. | திருமதி.எம்.லலிதா | ஆத்தூர் | 08.07.2005 | இந்நாள் வரை | விழுப்புரம் நகராட்சி |
| 2. | திரு.எம்.செல்வராஜ் | கும்பகோணம் | 24.06.2005 | இந்நாள் வரை | நாகப்பட்டினம் நகராட்சி |
| 3. | திருமதி.ஜி.சுமதி | விழுப்புரம் | 19.08.2005 | இந்நாள் வரை | ஆம்பூர் நகராட்சி |
| 4. | திரு.ஜே.ஷேப்லிசுந்தர் | வேலூர் மாநகராட்சி | 30.06.2005 | இந்நாள் வரை | அம்பத்தூர் நகராட்சி |
| 5. | திரு.வி.நடராஜன் | அம்பத்தூர் | 24.06.2005 | இந்நாள் வரை | ஆத்தூர் நகராட்சி |

2. மேலே உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொண்டு 1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 116-ன்படி மேலே பத்தி 1ல் கலம் 6-ல் குறிப்பிட்டுள்ள நகராட்சிகளுக்கு உதவிப் பொறியாளர்கள்/இளநிலை பொறியாளர்களை நிர்வாக நலன் கருதி மாறுதல் செய்து அரசு ஆணையிடுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள தனியர்கள் தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்டிருந்தால், அவர்கள் தேர்தல் பணிகள் முடிந்த பின்னர் சம்பந்தப்பட்ட நகராட்சிகளில் பணியேற்க விடுவிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன்மார்டி,
அரசுச்செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
மாண்புமிகு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
செயலரின் தனிச்செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3., ந.ப.4., அ.ந.2) துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

நகராட்சி நிர்வாக இயக்ககம்,
சென்னை 600 005.

ந.க.எண்.42258/2008/எப்4

நாள். 30.4.2009.

அரசாணை (ப) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(மாந5) துறை, நாள்.30.4.2009 மேலனுப்பி வைக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக

30/4/09

பெறுநர்

நகராட்சி ஆணையர்கள்
ஆத்தூர் / விழுப்புரம் / கும்பகோணம் /
நாகப்பட்டினம் / ஆம்பூர் / அம்பத்தூர்.

மாநகராட்சி ஆணையர்கள், வேலூர் / சேலம்.

நகல்.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
வேலூர் / தஞ்சாவூர் / செங்கல்பட்டு / சேலம்.